மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது உண்மை. அதுபோல் ஏராளமான கண்மாய்கள் தூர்ந்து போய் இருப்பனவற்றைச் சீர்படுத்தினால் பக்கத்திலிருக்கும் கிணறுகளுக்கு ஊற்று நீர் வர வாய்ப்பு இருக்கும். நிலங்கள் பாசன வசதி பெற வாய்ப்பு இருக்கும். ஆனால், நிதி நிலைக்கு ஏற்ப ஒவ்வொன்றாக எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எம்.காம்., பி.காம்., பட்டப்படிப்புகள்

*416 வினா—திரு. வீ. மலைக்கண்ணன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த மாலை நேரக் கல்லூரியில் எம்.காம்., பட்டப்படிப்பு துவக்குமாறு அப் பல்கலைக்கழகத்திற்கு பரிந்துரை ஏதேனும் செய்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, எம்.காம்., போன்ற மேல் பட்டப் படிப்பு மிகவும் இன்றியமையாது இருக்கிற காரணத்தால் சென்னைப் பல்கலைக்கழகத்தின் கீழுள்ள கல்லூரிகளிலும், மதுரைப் பல்கலைக்கழகத்தின் கீழுள்ள கல்லூரிகளிலும் விஸ்தரிக்கச் செய்ய அரசு வேண்டிய ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பி.காம்., பட்டப் படிப்பு பல்வேறு கல்லூரிகளிலும் துவக்க வேண்டும் என்று கோரிக்கைகள் வருகின்றன. பி.காம். பட்டப் படிப்புக்குத் தேவையான ஆசிரியர்கள் எண்ணிக்கை இப்போது இருக்கிற அளவுக்கு இருக்கிறது. மேற்கொண்டு விரிவுபடுத்தினால் அதற்கு எம்.காம். படித்தவர்களை உருவாக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது. சென்னைப் பல்கலைக்கழகத்தின்கீழ் 9 கல்லூரிகளிலும், மதுரைப் பல்கலைக்கழகத்தின்கீழ் இரண்டு கல்லூரிகளிலும் எம்.காம். வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. அவற்றிலிருந்து உருவாகிறவர்களைப் பயன்படுத்தும் அளவுக்கு விரிவு படுத்த வேண்டுமென்று கூறுகிறார்கள். என்றாலும், அரசு பல்கலைக் கழகத்தினிடத்தில் எம்.காம். வகுப்புக்கு அதிக முக்கியத்துவம் தரலாம் என்று கூறியிருக்கிறது.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, இந்த மாலை நேரக் கல்லூரிகளில் பணியாற்றும் பேராசிரியர்கள் அந்தந்தக் கல்லூரிகளில் பணியாற்றும் பேராசிரியர்கள்தானா ? அப்படியானால், அவர்களுக்கு என்று தனியாக வழங்கப்படுகிற சலுகைகள் என்னென்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தந்தக் கல்லூரி களில் பணியாற்றும் பேராசிரியர்கள்தான் அதிலே பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு என்னென்ன சலுகைகள் வழங்கப்படுகின்றன என்பதைப் பற்றிய குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

*417 Q.—Thiru N· K. Palanisamy : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state :

(a) whether it is a fact that there are no sufficient number of qualified teachers for B. com., courses in the State ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ : இப்பொழுது துவக்கப்பட்டுள்ள வகுப்புகளுக்குப் போதுமான அளவு பேராசிரியர்கள் இருக்கிறார்கள். புதிய நியமனங்களுக்குத் தேவைப்படும் வகையில் எம்.காம். பட்டதாரிகள் உருவாக்கப்பட்டு வருகிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த எம்.காம். பட்டதாரிகளில் நல்ல வகுப்பு எடுப்பவர்களுக்குத்தான் பேராசிரியர் பதவி கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. ஏற்கனவே சி. பிளஸ், பி. பிளஸ் எடுத்து பாஸ் செய்தவர்கள் வேலை கிடைக்காமல் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, எம்.காம். பட்டதாரிகளில் சற்று தகுதி குறைவாக இருந்தாலும், அவர்களுக்கும் பேராசிரியர் பதவி கொடுக்க அரசு உத்தேசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : போதுமான அளவுக்கு தகுதி பெற்றவர்கள் கிடைக்காத நேரத்தில் அவர்களுக்குக் கல்வித் தகுதி ஓரளவிற்குத் தளர்த்தப்படுகிறது. தளர்த்துவதற்கு அவசியம் இல்லாத நேரத்தில், தளர்த்துவது இல்லை. ஆங்கிலப் பயிற்சிக்கும், பி.காம். பயிற்சிக்கும் அந்தக் கல்வித் தகுதி இல்லாதவர்கள் என்ற நிலை ஏற்படுகிற போது சி. பிளஸ், பி. பிளஸ் வாங்கியவர்களையும் எடுத்துக்கொள்ளலாம் என்ற அளவுக்குத் தளர்த்துகிறோம்.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இப்போது பி.காம். படித்தவர்கள் குறைவாக இருப்பதால், பி.காம். வகுப்பு பாடங்கள் எடுக்க ஆசிரியர்கள் குறைவாக இருக்கிறார்கள். கல்கத்தா, பம்பாய் போன்ற நகரங்களில் மாலை நேர வகுப்புகளில் எம்.காம். பயிலக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதேபோல், இங்கே தொழில் துறையில் இருப்பவர்கள் படிக்க வாய்ப்பு அளிக்கக்கூடிய வகையிலும், ஆசிரியர்கள் பற்றாக் குறையைக் குறைக்கும் வகையிலும் எம்.காம். வகுப்பு மாலை நேரத்தில் படிக்க வசதி ஏற்படுத்திக்கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தக் கருத்தை வேண்டுமானால் மாநில அரசு பல்கலைக்கழகங்களுக்கு பரிந்துரை செய்யலாம். அது பற்றி முடிவு எடுக்க வேண்டியது பல்கலைக்